செய்தி வெளியீடு எண்:110 நாள்: 24.02.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது அறிவிப்பின்படி, புதிய திட்டமாக "உயர்மட்ட விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகைத் திட்டம்" தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, விளையாட்டுத் திறமைகளின் அடிப்படையில், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லக் கூடிய தலைசிறந்த ஆண் மற்றும் பெண் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு அயல்நாட்டுப் பயிற்சி, அயல்நாடுகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பிற்கான செலவினம், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தேவையான இதர செலவினங்களுக்கான தொகை வழங்கப்பட்டு சர்வதேசப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வகையில் வழி வகுக்கப்பட்டது.

அதனடிப்படையில், வாள் சண்டை வீராங்கனையான செல்வி சி.ஏ. பவானிதேவி அவர்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, இதுவரையில் ரூ.22,04,512/- வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 17.11.2016 முதல் 20.11.2016 முடிய பிரான்ஸ் நாட்டின் ஓர்லின்ஸ் நகரில் நடைபெற்ற உலகக் கோப்பை வாள் சண்டைப் போட்டிகளில் கலந்து கொண்டமைக்காகவும், கடந்த 16.12.2016 முதல் 18.12.2016 முடிய மெக்ஸிகோ நாட்டின் கேன்கன் நகரில் நடைபெற்ற வாள் சண்டை கிராண்ட் ப்ரி போட்டிகளில் கலந்து கொண்டமைக்காகவும், செலவினத் தொகையாக ரூ.5,43,386/- (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து மூன்னூற்றி எண்பத்தி ஆறு மட்டும்) அனுமதித்து, மேற்படி தொகைக்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 69–வது பிறந்த நாளான இன்று (24.2.2017) செல்வி சி.ஏ. பவானிதேவி அவர்களின் தாயாரிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன், சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. வெற்றிவேல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர் திரு. அஷோக் டோங்ரே, இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 24.2.2017**